1981 பிப்ரவரி 10]

குறிஞ்சிப் பாடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றது. குறிஞ்சிப்பாடி, கரூர் ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றவை மத்திய அரசின் முழு நிதியுதவியோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற துணி ரகங்களை உற்பத்தி செய்கின்றன. மற்ற நான்கு இடங்களில் இயங்கி வருபவை மாநில, மத்திய அரசுகளின் நிதியுதவியோடு கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து வருகிறது. இவை அனைத்தும் கைத்தறிக் கழகமாக மாற்றப்பட்டு கூட்டுறவு இயக்கமாகக் கொண்டு வரப் பட்டிருக்கின்றது. இக்கழகம் தயாரிக்கின்ற துணிகளை கோ-ஆப் டெக்ஸ் 50 சதவீதம் கொள்முதல் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த அலுவலகத்தை சுமார் 6 மாதத்திற்கு முன்பே ஸ்ரீவில்லிப்புத் தூரில் ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனால் இடம் கிடைக்க வில்லை என்று கூறி அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர் களே, இந்தக் கழகம் 1964-ல் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 19-1-78-ல் கைத்தறி வளர்ச்சிக் கழகமாக மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூரில் எந்தவிதமான கிளைக் கழகமும் ஆரம்பிப்பதற்கான செயற் குறிப்பே இல்லை. ஆகவே, அதற்கான நிதி ஒதுக்கீடு பற்றியும் குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி துணிகள் ஏற்றுமதி

*வினா எண். 279— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து 1979-80, 1980-81 ஆண்டுகளில் வெளிநாட்டிற்கு எத்தனை ரூபாய் பெறுமான துணிகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) வெளிநாட்டிற்கு கைத்தறித் துணிகளை அனுப்பு வதில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) 1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ரூ. 56.35 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளன.

நடப்பு ஆண்டுக்கு (1980–81) குறிப்பிட்ட இலக்கு ஏதும் வைக்கப்படவில்லை. எனினும் இவ்வாண்டு துவக்க மாதங்களில் அகில இந்திய அளவில் ஏற்றுமதி போக்குநிலை ஊக்கமளிப்பதாக கைத்தறி ஏற்றுமதி முன்னேற்றக் கழகத்தின் ஏற்றுமதி ஆய்வுரையிலிருந்து தெரிய வருகிறது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 10–10)

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறித் துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பெறுவதில் தரம் குறைந்திருப்பதினாலேயே ஏற்றுமதியும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இந்த ஏற்றுமதி டிசைன்களின் தரத்தை பாதுகாக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் குறைந்திருப்பதாக தகவல் ஏதும் இல்லை. இருப்பினும் நமது கைத்தறித் துணிகள் வெளிநாட்டினரின் விருப்பத்திற்கு ஏற்ப புது ரகங்களில் உற்பத்தி செய்யப் பெறுவதற்கான டிசைன் சென்டர்கள் கூட தமிழகத்தில் இயங்கி வருகிறது, ஆகவே அதிகப்பட்சமான அளவிற்கு தமிழக கைத்தறி துணிகளுக்கு வெளிநாட்டிலே வரவேற்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக கைத்தறித் துணிகளை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலே சங்கடங்கள் ஏற்படுவதினால், பொதுவுடமை நாடுகளில் அவைகளை ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்பெறுமா என்பதையும் அவைகள் அளவிற்கு அதிகமாகத் தேங்கி கிடப்பதினால் பலகோடிரூபாய் பெறுமானதுணிகள் அப்படியே வைக்கப்பெற்றிருப்பதாகத் தெரிகிறதே, அவைகளின் மீது ரிபேட் கொடுத்து விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ரக துணிகள் தேங்கிக் கிடப்பதாக தகவலே இல்லை. ஆகவே, உற்பத்தி பண்ணியதற்கு ரிபேட் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. ரிபேட் என்பது விசேஷ காலங்களில் மட்டும் கொடுக்கப்பெறுவதாக ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது.

1981 பிப்ரவரி 10]

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கைத்தறி சங்கத்தினுடைய அமைப்புகள் எல்லாம் 3 மாதங்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதில் பல கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று அந்த மாநில அமைப்பு வெளியிட்டிருந்தது. அது உண்மையா? ஆம் என்றால், அந்தத் துணிகளை ஏன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்

திரு. எஸ். என். இராசேந்திரன் : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பெறும் துணிகள் 3 மாதங்களாக தேக்கம் அதிகமாக ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். என்னிடத்தில் கொடுக்கப்பெற்றுள்ள குறிப்பில் அப்படி இல்லை. மாறாக கடந்த 3 மாதங்களில் மட்டும் 12,91,00,000 மதிப்புள்ள துணிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பெற்றிருக்கிறது என்றும் இது வழக்கத்தை விட அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

இலவசமாக அரிசி வழங்கல்

*வினா எண் 280—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவித்தொகை பெறும் வயோதிகர்கள், ஊனமுற்றோர்கள் கைம்பெண்கள் ஆகியவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி அரசு இனாமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) அரசு உதவித் தொகை பெறும் முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகிய அனைவரும் இத்திட்டத்தின் கீழ் 1–11-1980 முதல் வாரம் ஒரு கிலோ உயர்ரக அரிசியை இலவசமாகப் பெறுகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கொடுக்கப்பெறும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதனை கூடுதலாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்